III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.
O.S.27/2021

Deposition of witness for the Plaintiff/PW1
solemnly by Tmt.R.Santhi, Translator
in accordance with the provision of Act I for 1873 on 20-09-2025

| | | | |
|---|---|---|---|
| Name | : தேம்பாவணி | Village | : |
| Father's / Husband's Name | : சுப்பிரமணியன் | Calling | : |
| Age | : | Taluk | : |

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

(சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு 2 முதல் 13 வரையுள்ள பிரதிவாதிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.)

எனது தகப்பனார் எழுதி வைத்த உயில் 27.06.1995 தேதியிடப்பட்டது. அந்த உயிலை நான் படித்துப் பார்த்திருக்கின்றேன். இந்த உயில் படி தாவா சொத்து 1ஆம் பிரதிவாதி பெயருக்கு சொத்து எழுதி வைக்கப்பட்டிருக்கின்றதா என்றால் சரிதான். ஆனால் அந்த உயில் எழுதும்போது எங்களை கேட்கவில்லை. உயிலும் probate செய்யப்படவில்லை. நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் 22.06.1994 ல் தான் உயில் எழுதி வைக்கப்பட்டது என்றால் நான் தேதியை தோராயமாக தான் சொன்னேன். எனக்கு உயில் எழுதப்பட்டதாக சொல்லும் 22.06.1994 க்கு முன்பாக 15.06.1994 ல் தான் திருமணம் நடைபெற்றது. இந்த உயில் எழுதுவதற்கு எந்த அவசியமும் இல்லை. இந்த உயில் எழுதப்பட்ட விவரம் எனக்கு 2022ம் ஆண்டு கொரோனா காலகட்டத்திற்கு பின்பு தான் தெரியவந்தது. நான் இது சம்மந்தமாக கொரோனா கால கட்டத்தில் வில்லங்கம் போட்டுப் பார்த்தேன். அந்த வில்லங்கச் சான்றிதழை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கின்றேன். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் வில்லங்கச் சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது வழக்கறிஞரிடம் ஒப்படைத்திருக்கின்றேன். இந்த உயில் எழுதப்பட்ட விவரம் எனது உறவினர்கள் மூலமாக எனக்கு தெரியவந்தது. என்னுடைய சித்தப்பா மகன்கள் ஜவகர், விக்கி மூலமாக எனக்கு தெரியவந்தது. என்னுடைய

சித்தப்பா மகன்கள் என்னுடைய அண்ணனோடு தொடர்பில் இருப்பதால் இந்த விசயம் அவர்களுக்கு தெரியவந்தது. தாவா இடத்தில் அப்பார்ட்மெண்ட் கட்டியிருக்கிறார்கள். அது எந்த ஆண்டு கட்டப்பட்டது என்று எனக்கு தெரியாது. அந்த அப்பார்மெண்டில் 6 வீடு கட்டி 3 வீடை எனது அண்ணன் எடுத்துக்கொண்டும், 3 வீடை பில்டர் எடுத்துக்கொண்டார். இந்த அப்பார்ட்மெண்ட் கட்டப்பட்ட பிறகு தான் எனக்கு விவரம் தெரிந்து வழக்கு போட்டேனா என்றால் சரிதான். சாட்சி தற்பொழுது அப்பார்ட்மெண்ட் கட்டப்பட்டு முடிவடையும் தருணத்தில் தான் தனக்கு தெரியவந்ததாக கூறுகின்றார். அப்பார்ட்மெண்ட் கட்டுவதற்காக பில்டருடன் எனது அண்ணன் அக்ரிமெண்ட் எதுவும் போட்டுள்ளாரா என்ற விவரம் எனக்கு தெரியாது. இவ்வாறு கட்டப்பட்ட பிறகு நான் எனது அண்ணனிடம் போய் கேட்டேனா என்றால் போன் போட்டு திட்டினேன். ஏன் இப்படி துரோகம் செய்தாய் என்று கேட்டேன். அதற்கு என்னுடைய அண்ணன் நான் சாகபோறேன். என்னுடைய பொண்ணுகளை எல்லாம் செட்டில்செய்ய வேண்டும். அதனால் இப்படி செய்தேன் என்று சொன்னார். என்னுடைய அம்மா பெயரில் அனகாப்புத்தூரில் சொத்துகள் இருந்தது என்றால் அப்படி எதுவுமே எனக்கு தெரியவில்லை. என்னுடைய தாயார் அனகாப்புத்தூரில் இருக்கின்ற பிளாட் எண்.1 யை அரைகிரவுண்ட் இடத்தை எனக்கு 27.01.1998 ல் எழுதி வைத்திருக்கின்றார் என்றால் அப்படி பட்ட பிளாட் இருந்தால் அதனை எனக்கு காண்பியுங்கள். அதே போல என்னுடைய சகோதரி பாரதிக்கு என்னுடைய தாயார் 1380 சதுரடி நிலத்தை கொடுத்திருக்கின்றார் என்றால் அதனை அவரைத் தான் கேட்கவேண்டும். கொடுத்திருக்கின்றார்களா இல்லையா என்று எனக்கு தெரியவில்லை. எனது சகோதரர் மோகன்தாஸ் இவ்வழக்கில் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை நான் படித்துப்பார்த்திருக்கிறேனா என்றால் உண்மையாக இருந்திருந்தால் அதனை படித்திருப்பேன் பொய்யாக இருந்ததால் நான் அதனை படித்துப் பார்க்கவில்லை. நான் தாக்கல் செய்திருக்கின்ற நிரூபண வாக்குமூலத்தில் 1 ஆம் பிரதிவாதி தாக்கல் செய்திருக்கின்ற எதிர் வழக்குரையை பற்றி எப்படி என்னால் படித்துப் பார்க்காமல் சொல்லியிருக்க முடியும் என்றால் எனக்கு தெரிந்ததை நான் சொன்னேன். நான் தாக்கல் செய்திருக்கின்ற நிரூபண

வாக்குமூலத்தை படித்துப் பார்த்தால் தான் என்னால் இதற்கு பதில் அளிக்க முடியும். நான் இந்த நிரூபண வாக்குமூலத்தில் படித்துப் பார்த்து கையெழுத்துப் போட்டேனா அல்லது படித்துப் பார்க்காமல் கையெழுத்து போட்டேனா என்றால் நான் இதில் கையெழுத்துப் போட்டிருக்கின்றேன். அதனால் இதனை படித்திருப்பேன். ஆனால் என்ன எழுதியிருக்கின்றது என்று எனக்கு தற்போது ஞாபகம் இல்லை.

(அறிவார்ந்த 2 முதல் 13 வரையுள்ள பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).